## கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.88/2025

### அ.சா. 7 (LW 10)

| **பெயர்** | **திரு. ராஜசேகர்** | **தொழில்** | |
|---|---|---|---|
| **த/ பெயர்** | கருப்புச்சாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **20.07.2026** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆரியநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நாமக்கல் அரசு மருத்துவமனையில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 7 வருடம் முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் உள்ள சவக்கிடங்கிற்கு என் பெரியப்பா பேரன் சூரியபிரகாஷ் இறந்து விட்டதாக விவரம் தெரிந்து சென்றேன். நான் போய் பார்த்த போது சவக்கிடங்கில் பிரேதத்தை அடையாளம் காண்பித்து பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினார்கள். பிரேத விசாரணைக்கு சாட்சியாக இருக்கச் சொன்னார்கள், இருந்தேன். வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.**

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.07.21 20:45:23 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.